செய்தி வெளியீடு எண்:156 நாள்:02.03.2009

# செய்திக்குறிப்பு

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் அதிகாரம் அளிக்கப் பெற்ற குழுக்கூட்டம் இன்று (02.03.2009) காலை 10.00 மணியளவில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

தமிழகத்தின் முக்கிய வழிபாட்டு தலங்களில் ஒன்றான தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் பேரூராட்சிக்கான குடிநீர் திட்டம் ரூபாய் 11 கோடியே 92 லட்சம் மதிப்பீட்டில் சுமார் 41800 மக்கள் பயன்பெறும் வகையில் தனிக்குடிநீர் திட்டம் செயல்படுத்துவதற்கும், கடலூர் மாவட்டத்தில், கடலோர பகுதிகளான குமராட்சி மற்றும் பரங்கிப்பேட்டை ஒன்றியங்களைச் சேர்ந்த குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட 121 குடியிருப்புகளுக்கும் மற்றும் கிள்ளை பேரூராட்சிக்கான ரூபாய் 15 கோடியே 16 லட்சம் மதிப்பீட்டில் 67 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக்குடிநீர் திட்டமும் இன்றைய கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் தலைமைச்செயலாளர் திரு.ஸ்ரீபதி, இ.ஆ.ப., நிதித்துறை சிறப்பு செயலர் திரு.பிரவின்குமார், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலர் திரு.நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.ஸ்வரண்சிங், இ.ஆ.ப., திட்டம் வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை இணைச் செயலாளர் திரு.ஆசைத்தம்பி மற்றும் வாரிய பொறியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

*********

வெளியீடு:இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9